வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# பொதுவுடைமைவாதி ஆர்.எஸ். ஜேக்கப் இலக்கியப் பணி

**மா. இராஜா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)
தூய வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க காலத்தில் சிறந்திருந்த சைவ வைணவ சமயங்கள் சங்கம் மரவிய காலத்தில் களப்பிரர் வருகையால் சிறப்புக் குன்றிப் போக சமண பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. மீண்டும் பக்தி இயக்கத்தால் பல்லவர் காலேம்ம முதல் நாயக்கர் காலம் வரை சைவ வைணவ சமயங்களின் செல்வாக்கு மிகுந்திருந்தது. இஸ்லாமியர் ஆட்சியால் இஸ்லாமியம் பரவியது. அடுத்து ஐரோப்பியர் ஆட்சியால் அவர்களின் கிறிஸ்துவம் பரவியது. வணிகத் தொடர்போடு நில்லாமல் சமயயத்தையும் பரப்ப முற்பட்டனர். சமய பிரசாரத்திற்காகக் கிறிஸ்துவ பாதிரிமார்களையும் உடன் அழைத்து வந்தனர். பாதிரிமார்கள் கிறிஸ்துவத்தைப் பரப்பும் தொண்டினைச் செய்தனர்.

மதம் மற்றும் ஆட்சி காரணத்தால் நம் மொழியைக் கற்கத் தொடங்கினர். தமிழின் இனிமையில் தம்மை மறந்து தமிழுக்குத் தொண்டாற்றினர். தம்மை அறியாமல் தமிழுக்குத் தொண்டாற்றினர். ஆனால் மதமாற்றம் செய்யப் பெற்ற கிறிஸ்தவர்கள் அறிந்தே தொண்டு செய்தனர். இவர்களுள் ஜி.யு.போப், ராபர்ட்-டி-நொபிலி, வீரமாமுனிவர், சீகன் பால்கு ஐயர், எல்லீஸ் துரை, கால்டுவெல் போன்ற மேல்நாட்டு கிறிஸ்துவர்களும் வேதநாயகம் பிள்ளை, வேதநாயக சாஸ்திரி, சாமுவேல்பிள்ளை, கிருட்டிணப்பிள்ளை போன்ற தமிழ்க்

கிறிஸ்துவர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள். அவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

**கலைச்சொற்கள்**

சுதந்திரம் – வாத்தியார் – தலித் – ஜமீன் – தோழர் - மிசினரி

**முன்னுரை**

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி, நம் நாட்டில் தமது சமயத்தைப் பரப்ப வந்த கிறித்தவர்கள் தமிழ்மொழிக்குத் தொண்டு புரிந்தனர். மேலை நாட்டிலிருந்து மதம் பரப்ப வந்த சமயத் தலைவர்கள் தமிழ் மொழியை முறையாகக் கற்று தமிழுக்கு இலக்கியத் தொண்டும் புரிந்துள்ளனர். அதோடு சமயம் வளர்ந்து வந்தது. தமிழகத்தில் கிறித்தவப் படைப்பாளர்களும் மொழிக்கு வளம் சேர்க்கும் வகையில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அவர்களில் ஆர்.எஸ். ஜேக்கப்பும் ஒருவர். பொதுவுடைமைச் சிந்தனை கொண்டவரான ஆர்.எஸ். ஜேக்கப் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது

**பிறப்பு, கல்வி**

ஆர்.எஸ். ஜேக்கப் தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி அருகே ராஜாவின் கோயில் கிராமத்தில் சந்தோஷம் நாடார், பொன்னம்மாள் இணையருக்கு 1925இல் பிறந்தார். உடன்பிறந்தவர்கள் பதினொருவர். தந்தை விவசாயி. பருத்தி வணிகமும் செய்தார். ராஜாவின்கோவில் மிஷன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை பயின்றார். அருகிலுள்ள புதியம்புத்தூர் கிராமத்தில் உயர் நிலைக்கல்வி பயின்றார். எட்டாம் வகுப்பில் தாய் இறந்ததால் பள்ளிப் படிப்பு தடைபட்டது. பின் திருநெல்வேலி அரசு போதனாமுறை பயிற்சிப் பள்ளியில் இரண்டாண்டுகள் பயின்றார். ஆர்.எஸ். ஜேக்கப் 1956-ல் வயலட் மேரி ஃப்ளாரன்சை திருமணம் செய்து கொண்டார். அவரும் ஆசிரியராகப் பணி புரிந்தவர் ஆவார்

**ஆசிரியப்பணி**

சுதந்திரக் கனல் தேசமெங்கும் வீசியடித்துக் கொண்டிருந்தது. இளைஞர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் என அனைத்து மக்களும் தமது கடமையை ஆற்றிட களத்தில் குதித்தனர். தேசம் முழுவதும் ஒரே குரலில் “சுதந்திரம்” என்ற ஒற்றை வார்த்தையில் உயிரை சுவாசித்துக் கொண்டிருந்தனர். 18 வயதில் பி.யு.சி படிப்பை முடித்த. ஆர்.எஸ்.ஜேக்கப் அவர்களுக்கு கிறிஸ்தவ மிசினரி பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக பணியாற்றிட அழைப்பு வந்தது அவரும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டம் விளாத்திகுளம் அருகே பண்ணையூர் கிராமத்தில் ஆசிரியராக பணியாற்றிட தயாரானார். பண்ணையூர் கிராமத்தில் ஏழை, எளிய பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூடம் துவங்கிட ஏற்பாடு செய்ய வேண்டுமென ஆவலோடு ஊர் ஜமீனை சந்தித்தார். ஏழை சாதி பசங்க பள்ளிக்கூடம் போனா மாட்டுத் தொழுவத்துல உங்க அப்பனா வேலை பாப்பான்? என்ற ஜமீன் பதில் அவரை காயப்படுத்தியது. ஜமீனுக்குத் தெரியாமல் தலித் மக்கள் தெருவில் கிணற்றடியில் கூரை வேய்ந்து பள்ளிக்கூடம் ஒன்றைத் துவங்கினார்.

வீடு, வீடாகச் சென்று குழந்தைகளை தேடிப்பிடித்து மாணவனாக்குகிறார். நாளாக ,நாளாக ஜமீன் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் வரும் வேலையாட்களின் எண்ணிக்கை குறைகிறது. எண்ணெய் தேய்த்து, சுத்தமான ஆடையுடன் அப்பாவின் சுடு சொல்லுக்குப் பயந்து சில குழந்தைகள் மட்டும் வேலைக்கு வந்து கொண்டிருந்தது. ஜமீனுக்கு இது புதிதாக தெரிகிறது. ஊரில் என்ன நடக்கிறது என விசாரிக்கிறார். கோபம் கொப்பளிக்க வாத்தியாரைத் தேடுகிறார். பண்ணையூரிலிருந்து தப்பித்து ஸ்ரீவைகுண்டம் வந்தார்.

**அரசியல் வாழ்க்கை**

ஆர்.எஸ். ஜேக்கப் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர். பாலதண்டாயுதம் மற்றும் சில தோழர்களுடனான தொடர்பு மூலம் அரசியல் விழிப்புணர்வு பெற்றார். ஆர்.எஸ்.ஜேக்கப் இந்திய விடுதலைக்கு முன்பிருந்தே

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிரமாக இயங்கியவர். தென் மாவட்டங்களில் ஆங்கிலேய அரசை எதிர்த்து கலகம் நடந்து கொண்டிருந்தபோது ரயிலைக் கவிழ்க்க கம்யூனிஸ்ட்காரர்கள் முடிவு செய்து அதை நடத்திய பின் தலைமறைவாயினர்.

தலைமறைவான தோழர்களுக்குக் கோழி அடித்து சாப்பாடு போட்டார். சில நாட்கள் தலைவர்களுக்கு தன் வீட்டில் தஞ்சம் கொடுத்தார் என நெல்லை சதி வழக்கில் பதினெட்டாவது குற்றவாளியாக கைது செய்யப்பட்டார் வாத்தியார் ஆர்.எஸ்.ஜேக்கப். அவர் வீட்டில் சதித் திட்டம் தீட்டப்பட்டதாக வழக்கு புனையப்பட்டது. கிறிஸ்தவப் பாதிரியார் ஆர்.எஸ்.ஜேக்கப் கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடம் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் தோழர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியரானார். (இப்போது உள்ள சிறையல்ல) அவரின் சிறை அனுபவங்களை பதிவு செய்துள்ளார்.

நெல்லை சதிவழக்கில் சிறைப்பட்டு 1956இல் சிறையிலிருந்து வெளிவந்த பின் மீண்டும் ஆசிரியப்பணி செய்தார். கதீட்ரல், தூய யோவான் பள்ளிகளில் வேலை பார்த்த பின் 1985-ல் பணி ஓய்வு பெற்றார்.

**இதழியல்**

பதினெட்டாம் நூற்றாண்டு முதல் வெளிவரும் நற்போதகம் இதழின் ஆசிரியராகப் பன்னிரண்டு ஆண்டுகள் செயல்பட்டார். சிறுவர் சுடரொளி, பாலியர் நேசன், மனைமலர் போன்ற இதழ்களிலும் ஆசிரியராக இருந்தார்.

**இலக்கிய வாழ்க்கை**

ஆர்.எஸ். ஜேக்கப்பின் முதல் சிறுகதை ‘பாஞ்சைப் புலிகள்’ 1947-ல் தினசரிமடல் வார இதழில் வெளியானது. ஆர்.எஸ். கோபு என்ற பெயரில் எழுதினார். தமிழ்மணி, சிற்பி, தாமரை, ஜனசக்தி, பிரசண்ட விகடன், நிருபம், சுடரொளி போன்ற இதழ்களில் எழுதினார்.

ஆர்.எஸ்.ஜேக்கப் எழுதிய முதல் சிறுகதைத் தொகுப்பு ‘மோசம்போன மோதிரம்’ 1949-ல் வெளியானது. தொடர்ந்து ‘நூறு த்ருஷ்டாந்த கதைகள்’, ’நூறு ஜீவனுள்ள கதைகள்’, ’நூறு அருளுரைக் கதைகள்’ போன்ற தொகுப்புகள் வெளிவந்தன.

ஒரு கரிசல் காட்டுக் கிராமத்தின் அவல நிலையை மாற்றுவதற்காக எடுத்த நடவடிக்கைகளை 'வாத்தியார்' என்ற நாவலில் எழுதியுள்ளார். நெல்லைச் சதி வழக்கு சம்பவங்களை நூல்களாக அவர் எழுதியுள்ளார். மூன்றாண்டுகள் சிறைவாசத்தை 'மரண வாயிலில்' என்ற நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். 3 நாவல்கள், 18 சிறுகதைத் தொகுப்புகள், வரலாற்று கள ஆய்வுகள் உட்பட இதுவரை 104 நூல்கள் எழுதியுள்ளார். டிசம்பர் 22, 2021இல் காலமானார்.

**விருது**

ஆர்.எஸ். ஜேக்கப் சான்றோருக்கான ஜீவா விருது பெற்றார்.

**நூல் பட்டியல்**

**சிறுகதை**

- மரண வாயிலிலே பைபிள்
- மோசம்போன மோதிரம்
- நூறு த்ருஷ்டாந்த கதைகள்
- நூறு ஜீவனுள்ள கதைகள்
- நூறு அருளுரைக் கதைகள்
- ஒலிக்கவில்லை
- சொல்லும் செயலும்
- பட்டுப்பாவாடை
- வரவேற்கப்படாத விருந்தாளி
- யானை மெழுகுவர்த்தி
- அக்கா வீட்டிற்குப் போனேன்
- பட்டணப் பிரவேசம்
- கிறுக்கன்

ஆர்.எஸ். ஜேக்கப் சிறுகதைகள்

**பிற**

தமிழில் முதல் சிறுகதை எது?

பனையண்ணன்

வாத்தியார்

நெல்லை அப்போஸ்தலன் ரேனியஸ்

உண்மைக்கதைகள்

கரிசல் காட்டுக் கதைகள்

நெல்லைச் சதிவழக்கின் தியாக தீபங்கள்

அருமையான பிரசங்கங்கள்

நகைமொழிக் கதைகள் நானூறு (நான்கு பாகங்கள்)

ஒரு வாத்தியாரின் டைரி

படைப்பாளியின் டைரி

சின்ன சின்ன கதைகள் பெரிய பெரிய உண்மைகள்

மணமும் குணமும்

பக்தியூட்டும் பல்சுவைக் கதைகள்

சான்றோரின் வாழ்வில் ஒரு நாள் நடந்த கதைகள்

அருமையான பிரசங்க ஆதாரக் கதைகள்

நெல்லைச் சரிதைக் கதைகள்

கரிசல்காட்டுக் கதைகள்

ஆர்வமூட்டும் அருட் கதைகள்

உயரிய உண்மைக் கதைகள்

உயிரூட்டும் உண்மைக் கதைகள்

சாட்சிக்கு ஒரு சாட்டை சுவையான செய்திக் கதைகள் ஐநூறு

உங்கள் குழந்தைகளுக்கு நல்ல நல்ல கதைகள்

இளம் தம்பதிகளுக்கு இனிக்கும் செய்திகள்

திருச்சபைத் தொண்டர்கள்

போன்ற பல நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்துள்ளார்.

**தொகுப்புரை**

கிறிஸ்தவ நவீன இலக்கியம் என அடையாளப்படுத்தப்படும் ஓர் எழுத்துமுறை தமிழில் உண்டு. கிருபா சத்தியநாதனின் நூல்களின் மொழியாக்கம் வழியாக இது உருவானது. அந்நூல்களை மொழியாக்கம் செய்த சாமுவேல் பவுல் அதன் முன்னோடிகளில் ஒருவர். மாற்கு ,ஐசக் அருமைராசன், டேவிட் சித்தையா என பல எழுத்தாளர்கள் கொண்ட இம்மரபின் முக்கியமான ஆளுமை ஆர்.எஸ்.ஜேக்கப். கிறிஸ்தவ இலட்சியவாதம் ஒன்றை முன்வைக்கும் எழுத்துக்கள் இவை. நேரடியான பக்தி இலக்கியங்கள் அல்ல. ஆர்.எஸ்.ஜேக்கப்பின் எழுத்துக்கள் அந்த இலட்சியவாதத்தை நேரடியாக முன்வைப்பவை, பிரச்சாரத்தன்மை கொண்டவை.